**தலைப்பு 102 – நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 102 – நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றுகையில் நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கி காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தால் கணக்கீட்டு உத்தியோகத்தராகத் தயாரித்து சமர்ப்பித்த இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மேலே குறிப்பிட்ட ஒதுக்கீட்டு கணக்கிற்கு அல்லது இணைக்க கூற்றிற்குப் புறம்பான நிதிக்கூற்றுக்களாக இருப்பதனால் அந்த அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1) (அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்கிய வகையில் மட்டுமல்லாது அரசாங்க கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. பெறுகை நடவடிக்கை திட்டமிடப்படாமை / போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3.1 |
| | | 2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை | 2.7(அ) |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.10 |
| | | 4. கட்டுநிதி மதிப்பீடு தயாரிக்கப்படாமை. | 2.9 |

| | | | |
|---|---|---|---|
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 2. மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.12 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.2 |
| | | 2. வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களை உரிய திகதிகளில் ஆரம்பிக்காமை. | 2.2 |
| | | 3. பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.3.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்படுதல். | 2.4(ஆ)(I) |
| | | 2. வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.4(ஆ)(II) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | பாதீட்டு நிதி ஏற்பாடு இன்றி கடப்பாடுகளை மேற்கொள்ளல் | 2.5 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு | 1. வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்தாமை | 2.7(ஆ)(i) |
| | | 2. மிகை நிதி ஏற்பாட்டை வழங்குதல் | 2.7 (ஆ)(ii) |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | | |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.8 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 அமைச்சின் பிரதான செயற்பாடுகள்

(அ) நிதி மற்றும் வரி கணிப்பு விடயம் தொடர்பாக திணைக்களங்கள் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள அவ்விடயங்களின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

(ஆ) பெரும்பாக நிதி முகாமைத்துவம் மற்றும் அரசாங்க நிதிக் கொள்கைகளைத் தயாரித்தல்

(இ) நிதி வளங்கள் முகாமைத்துவம் மற்றும் வருடாந்த பாதீட்டைத் தயாரித்தல்

(ஈ) பாதீடு தொடர்பான நிதிக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தலும் தேசிய பாதீட்டை அமுல்படுத்தலும்

(உ) அரசாங்கத்தின் வருமானங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலும் தேசிய வரிக் கொள்கையை முகாமைத்துவம் செய்தலும்

(ஊ) அரசாங்கத்தின் வருமானங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலும் தேசிய வரிக்கொள்கையை முகாமைத்தவம் செய்தலும்.

(எ) திரண்ட நிதியத்தை முகாமைத்துவம் செய்தல்

(ஏ) வரி முகவர் நிறுவனங்களின் ஒட்டுமொத்த மேற்பார்வை

(ஐ) அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல்

(ஒ) அரசாங்கத்தின் பெறுகை மதியுரைச் சேவைகள்

(ஓ) திணைக்களத்தின் ஏனைய அனைத்து விடயங்கள் சம்பந்தமான காரியங்கள்

(ஔ) நிறுவனங்களை மேற்பார்வை செய்தலும் ஏனைய அரசாங்க நிதிகளை நிர்வகித்தலும்

(க) அரசாங்க கணக்குகள் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி கூட்ட அறிக்கைகளைப் பேணுதல்

(கா) திணைக்களங்களில் முகாமைத்துவ கணக்காய்வை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களைத் தயாரித்தல்

(கி) ஆளனி நிர்வாகம்

## 2.2 அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செயற்திட்டங்கள்

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் வெளிநாட்டுக் கடன் பணத்தை ஈடுபடுத்தி அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 3,375.47 மில்லியன் கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தும் நிதிப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமை எஞ்சியுள்ள 02 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தாமத நிலையில் காணப்பட்டமை என்பவற்றின் காரணமாக ரூபா 1,896.72 மில்லியன் கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

2017 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பின்வரும் செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை செலவு செய்தல் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி இருந்தது. அமைச்சினால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்கு ரூபா 469.79 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 305.41 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு விடயம் | செலவு விடய விபரம் | வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | வழங்கல்கள் | | | |
| 1201 | எழுதுகருவிகளும் அலுவலக வேண்டுதல்களும் | 18.20 | 17.67 | 0.53 |
| 1203 | உணவுகளும் சீருடைகளும் | 0.89 | 0.48 | 0.41 |
| 1204 | மருத்துவ வழங்கல்கள் | 0.9 | 0.9 | - |
| 1205 | ஏனையவைகள் | 0.09 | 0.08 | 0.01 |

| | மூலதனச் சொத்துக்களை கையேற்றல் | | | |
|---|---|---|---|---|
| 2101 | வாகனம் | 120 | 78.63 | 41.37 |
| 2102 | மனைப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும் | 119.09 | 42.05 | 77.04 |
| 2103 | இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் | 60.62 | 51.68 | 8.94 |
| 2104 | கட்டிடங்கள் நிர்மாணம் | 150.00 | 113.91 | 36.08 |
| | மொத்தம் | 469.79 | 305.41 | 164.38 |

### 2.3.1 பெறுகைகளைத் திட்டமிடல்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) மற்றும் (ஆ) வழிகாட்டிகளின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கபடாத ரூபா 62.09 மில்லியன் கூட்டு மொத்தமான 04 பெறுகைச் செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தன.

### 2.3.2 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்

#### (அ) துப்பரவு செய்தல் சேவைகளை வழங்குதல்

பொதுத் திறைசேரியின் பழைய கட்டிடம் மற்றும் புதிய கட்டிடத்தை துப்பரவு செய்தல் சேவைக்கான வருடாந்த கட்டணமாக பெறுமதி சேர் வரி (VAT) இன்றி ரூபா 18,586,200 விலைக்கு ஒரு துப்பரவு செய்தல் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் அந்த வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அந்த மொத்த கிரய மதிப்பீடு உரிய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும் காட்டப்பட்டிருந்தும் அதன் பிரகாரம் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2(இ) வழிகாட்டியிலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் தகைமைபெற்ற அக்கறையுள்ள தரப்பினருக்கு பெறுகையில் பங்குபற்றும் வகையில் நியாயமான சமமான மற்றும் உச்ச அளவு சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக பகிரங்க பத்திரிகை அறிவித்தல் மூலம் தேசிய

போட்டி கேட்பு மனு தொடர்பான நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது மட்டுப்படுத்தப்பட்ட கேள்விகளின் கீழ் கேள்விகள் கோரப்பட்ட 03 நிறுவனங்களினால் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு துப்பரவு செய்தல் சேவை நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. விசேடமாக துப்பரவு செய்தல் சேவையை வழங்கும் போது இந்த முறைமை வெற்றியளிக்காதிருந்த சந்தர்ப்பங்கள் அனுபவிக்கப்பட்டிருந்ததனால் வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் ஒரு சேவை நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது என அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

(iii) அமைச்சு பெறுகைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட 07 ஆம் பந்தியின் அறிவுறுத்தலுக்கு முரணாக கேள்வி வழங்கப்பட்ட கடிதம் ஒப்படைக்கப்பட்டு 07 நாட்கள் மற்றும் சேவையினை வழங்குதல் ஆரப்பித்து 11 நாட்கள் தாமதித்து ரூபா 929,310 பெறுமதியான செயலாற்றல் பிணை முறி அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) துப்பரவு செய்தல் சேவையை வழங்கும் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்தும் மற்றும் பொதுத் திறைசேரியின் சுற்றாடலைத் துப்பரவு செய்யும் சேவை திருப்தியற்ற நிலையில் காணப்படுகின்றது என சேவை வழங்கும் நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தும் உரிய வேளைக்கு புதிய நிறுவனத்தை தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காது பெறுகைக்குழுவால் 03 சந்தர்ப்பங்களின் போது 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை 04 மாத காலத்திற்காகக் காணப்பட்ட ஒப்பந்தத்தின் திகதி கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியின் பழைய கட்டிடத்தையும் புதிய கட்டிடத்தையும் துப்பரவு செய்தல் நடவடிக்கையை ஒரே நிறுவனத்திற்கு வழங்குவதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதனால் அப்பெறுகை நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு காலம் எடுப்பதன் காரணமாக முன்னைய உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைக் காலத்தை கால நீடிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

**(ஆ) மின்சார நுழைவுக் கட்டுப்பாட்டு முறைமையைத் தோற்றுவித்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதி அமைச்சின் விராந்தைப் பிரதேசத்திற்கு மின்சார நுழைவுக் கட்டுப்பாட்டு முறைமையைத் தோற்றுவிப்பதற்காக கேட்பு மனுக்களை கோரும் போது முதலாவது பத்திரிகை அறிவித்தலை இரத்துச் செய்தல், இரண்டாவது பத்திரிகை அறிவித்தலை வெளியிட்டமை, பின்னர் அதில் திருத்தங்கள் செய்ய வேண்டி எற்பட்டமை என்பவற்றின் காரணமாக 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 433,400 மொத்த தொகையை அமைச்சு சிக்கன மற்ற வகையில் செலவு செய்திருந்தது.

(ii) இந்த ஒப்பந்தம் 2017 சனவரி 23 ஆந் திகதி ஆரம்பித்து 60 நாட்களுக்குள் அதாவது 2017 மார்ச் 24 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்காக 11 மாத காலம் எடுத்திருந்தது.

**(இ) ஆண்டறிக்கையை அச்சிடுதல்**

நிதி அமைச்சின் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் 4000 பிரதிகளை அச்சிடுவதற்காக வரையறுத்த கேள்விகளின் கீழ் கேள்விகள் கோரப்பட்டு அவற்றிற்கு மத்தியில் மூன்றாவது ஆகக் குறைந்த விலையாக ரூபா 4,648,000 (பெறுமதி சேர் வரியின்றி) கேள்வியைச் சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து இந்த அச்சிடல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆகக் குறைந்த விலையாக ரூபா 3,934,990 (பெறுமதி சேர் வரியின்றி) இரண்டாவது ஆகக் குறைந்த விலையாக ரூபா 4,433,900 (பெறுமதி சேர் வரியின்றி) சமர்ப்பித்த நிறுவனங்கள் உரிய திகதியில் வேலையைப் பூர்த்தி செய்வது தொடர்பாக விருப்பம் காட்டியிருக்கவில்லை என்ற அவதானிப்பைத் தெரிவித்து மேலே குறிப்பிட்ட மூன்றாவது ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்தின் கேள்வி மனு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அது அமைச்சு பெறுகைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் இந்த மூன்றாவது ஆகக் குறைந்த விலையுடனான கேள்விக்கும் ஆகக் குறைந்த விலையுடனான கேள்விக்குமிடையே ரூபா 713,010 வித்தியாசம் காணப்பட்டது. எவ்வாறாயினும் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரால் உரிய செயற்பாடு 14 – 19 நாட்களுக்கு இடைப்பட்ட வீச்சுடைய தாமத காலத்துடன் 06 சந்தர்ப்பங்களில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ii) ஆகக் குறைந்தது ரூபா 03 மில்லியனுக்கு மேல் அதிக பெறுமதியுடன் இதற்கு முன்னர் செய்யப்பட்ட இதற்குச் சமமான 03 ஒப்பந்தங்கள் தொடர்பாக உரிய நிறுவனத்தினால் சான்றுபடுத்தப்பட்ட ஆவனங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கேள்வி அறிவுறுத்தல் பத்திரத்தில் காட்டப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரால் அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த ஆண்டறிக்கையை அச்சிடுவது தொடர்பான பெறுகையின் போது 2006 பொருட்கள் மற்றும் வேலைகளுக்கான பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பின்வரும் ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

| **2006 பொருட்கள் மற்றும் வேலைகளுக்கான பெறுகை வழிகாட்டிக் கோவைக்கான தொடர்பு** | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** |
|---|---|
| 4.3.1(அ) மற்றும் 4.3.2 | அனைத்து தொடர்புபட்ட செலவுகளையும் உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு மொத்த கிரய மதிப்பீடு, உரிய பெறுகை அதிகாரிகளால் அங்கீகரித்தல் இடம்பெறவேண்டிய போதிலும் இதன் போது அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. |
| 1.2 | பந்தியில் காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுமாறு உரிய பெறுகை நிறுவனத்தினால் பெறுகைச் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அப்பெறுகையின் போது இப் பிரிவிலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் திறந்த போட்டி அடிப்படையிலான கேள்வி கோருதல் இடப்பெற்றிருக்கவில்லை. |

| | |
|---|---|
| மேலதிகம் 29 – 5.4.8 | வேலைகளுக்கான ஒப்பந்தத்தின் போது மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த பணத்தில் 5 சதவீதத்திற்கு குறையாத பணத்திலான செயலாபற்றல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் அவசியமானது எனக் காட்டப்பட்டிருந்தும் ரூபா 4,648,000 (பெறுமதி சேர் வரியின்றி தொகையான இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக செயலாற்றல் பிணை முறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவிலலை. |
| 8.5(அ) | அமைச்சு பெறுகைக் குழு தொடர்புபட்ட பெறுகையின் போது வெற்றிபெற்ற கேள்விதாரரை தெரிவு செய்துள்ளமை பற்றியும் அத்தீர்மானத்திற்கு எதிராக ஏதாவது முறைப்பாடு இருக்குமாயிருந்தால் அது பற்றியும் தெரிவிப்பதற்கு முடியுமான வகையில் அமைச்சு செயலாளரால் அனைத்து கேள்விதாரர்களுக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் இதன் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 8.9(அ) | இலங்கை ரூபா 250,000 இனை மிகைக்கும் வேலைகளுக்கான ஒப்பந்தத்திற்காக முறைப்படியான ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் அந்த எல்லையை மிகைத்த இந்த ஒப்பந்தங்கள் சம்பந்தமாக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவிலலை. |

(iv) நிதிப் பிரமாணம் 237(அ) இன் பிரகாரம் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தின் கீழ் செய்யப்படுகின்ற வேலைகள் அல்லது வழங்கல்களின் போது உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமாக வேலை செய்யப்பட்டுள்ளது என அல்லது வழங்கப்பட்டுள்ளது என சிபாரிசு செய்து கொடுப்பனவுகளை அனுப்புவதற்கு இனங்கியுள்ளது பற்றிய சான்றிதழ் இணைக்கப்பட வேண்டிய போதிலும் இந்த பெறுகையின் போது அவ்வாறு இடப்பெற்றிருக்கவிலலை.

**(ஈ) நிதி அமைச்சுக்கு மின்சாரப் படிக்கட்டுக்களை பொருத்துதல்**

நிதி அமைச்சினால் காணப்பட்ட நான்கு (04) மின்சார படிக்கட்டுக்களை அகற்றி புதிய மின்சாரப் படிக்கட்டுக்களைப் பொருத்துவதற்கான பெறுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் வழிகாட்டிகளின் பிரகாரம் பெறுகையை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்திலிருந்து முடிவுறுத்தப்படும் வரை ஒவ்வொரு பெறுகைச் செயற்பாட்டு நடவடிக்கை தொடர்பாக விபரித்து 02 கட்டங்களின் கீழ் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கபட வேண்டிய போதிலும் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) மற்றும் 4.3.2 வழிகாட்டிகளின் பிரகாரம் அனைத்து தொடர்புபட்ட செலவுகளையும் உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு மொத்த கிரய மதிப்பீட்டிற்குரிய பெறுகை அதிகாரிகளால் அங்கீகரித்தல் இடம்பெற்றிருக்க வேண்டிய போதிலும் இப்பெறுகைகள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

(iii) நிதி அமைச்சிற்காக 04 பயணிகள் படிக்கட்டுக்களை வழங்குதல், நிறுவுதல் அமுல்படுத்திக் காட்டுதல் என்பவற்றிற்காக தேசிய மட்டத்தில் போட்டி அடிப்படையிலான கேள்விகளைக் கோருவதற்கு ரூபா 111,555 செலவு செய்து பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க கேள்விகளைச் சமர்ப்பித்த நிறுவனங்களுக்கு மத்தியில் ரூபா 21,005,625 (பெறுமதி சேர் வரி இன்றி) நான்காவது ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்தின் கேள்வி தெரிவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இப்பெறுகைக்காக இதற்கு முன்னர் ரூபா 143,190 கூட்டு மொத்த கிரயத்தை மேற்கொண்டு கேள்விகளை கோருவதற்கான பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்கள் முழுமையற்ற நிலையில் காணப்பட்டதாகத் தெரிவித்து அக்கேள்விகளைக் கோருதலானது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இரத்துச் செய்யப்பட்ட கேள்விகளைக் கொருவதற்காகவும் இரண்டாவது கேள்வி கோரலில் தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரரினால் ரூபா 20,091,600 (பெறுமதி சேர் வரியின்றி) தொகையான கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க தெரிவு செய்யபப்பட்ட கேள்வியை இரத்துச் செய்யப்பட்ட கேள்வியுடன் ஒப்பிடும் போது ரூபா 914,025 அதிக பெறுமதியைக் கொண்டிருந்தது. முதலாவது கேள்வி கோரும் சந்தர்ப்பத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட 04 கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கேள்விகளை மதிப்பீடு செய்யும் போது தேவையான தகைமைகளுக்காக போதிய சான்றிதழ்களும் ஆவணங்களும் சமர்பிக்கப்படாததனால் நிராகரிக்கப்படுவதனைத் தவிர்த்து ஏனைய மாற்று வழி இல்லை என அமைச்சு செயலாளர் கணக்காயய்விற்கு தெரிவித்திருந்தனர்.
- தற்பொழுது காணப்படுகின்ற நான்கு மின்சார படிக்கட்டுக்களை அகற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது புதிய படிக்கட்டுக்களை வழங்குவதற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் காணப்பட்ட பழைய படிக்கட்டுக்களை அகற்றும் செயற்பாடும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டு இந்த ஒப்பந்தக்காரருக்கே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

- காணப்பட்ட படிக்கட்டை கழற்றி அகற்றுதலும் அதில் சிவில் வேலைகள் மேற்கொள்ளுதலும், மற்றும் புதிய படிக்கட்டுக்களை வழங்குவது தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கும் வகையில் நுட்ப அறிவுள்ள ஆலோசனை சேவையின் உதவியுடன் ஒரு கால வரையறை மற்றும் திட்டத்துடன் இப்பெறுகைச் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு செய்யப்படாது அடிக்கடி திட்டங்களை மாற்றியதன் காரணமாக இப்பெறுகையின் போது சிக்கலான தன்மை உருவாகியிருந்தது. அதன் காரணமாக 2015 மே 03 ஆந் திகதி கேள்வி கோருதல் ஆரம்பிக்கப்பட்டு இப்பெறுகைகள் செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரை 01 ஆண்டு 07 மாதங்கள் எடுத்திருந்தும் இச் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

- புதிய படிக்கட்டினைப் பொருத்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு 2016 யூன் 16 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளல் கடிதம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் 29 ஆந் திகதி உரிய ஒப்பந்தம் சம்பந்தமாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் 24 ஆந் திகதி முற்பணமாக ரூபா 4,663,250 ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை 01 ஆண்டு 02 மாதங்கள் கடந்திருந்தும் இந்த ஒப்பந்தத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவிலலை.

அவ்வாறே இந்த முற்பணத்திற்காக ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்ட வங்கிப் பிணை 2017 மார்ச் 13 ஆந் திகதியிலிருந்து காலாவதியாகியிருந்தது.

- இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக உரிய ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் செயலாற்றல் வங்கிப் பிணையின் செல்லுபடியான காலம் முறையே 2017 ஆகஸ்ட் 31 மற்றும் 2018 பெப்ரவரி 26 ஆந் திகதிகளில் காலாவதியாகி இருந்ததுடன் அவற்றின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது தொடர்பாக அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(உ) நிதி அமைச்சின் உணவுச்சாலையை நடாத்துதல்**

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

(i) உணவுச்சாலையை நடாத்துவதற்காக ஒரு நிறுவனத்தை தெரிவுசெய்வதற்காக தேசிய பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்டு அதற்காக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் ஒரு ஆண்டு காலத்திற்காக உணவுச் சாலையை நடாத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இரு தரப்பினரும் முறைப்படியான உடன்படிக்கை செய்து கொண்டிருக்கவில்லை.

(ii) உணவுச்சாலைக்காக மின்சாரம், குளிர்காப்பு வசதிகள், தேவையான மின்சாரமும் ஏனைய துணைக் கருவிகளும் என்பன நிதி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தும் உணவுச்சாலையை நடாத்திவந்த நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த ரூபா 200,000 வங்கிப் பிணையைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஊ) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------

அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள 11 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக 2016 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2017 பெப்ரவரி மாதம் வரை வாடகைப் போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 18,006,118 செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இப் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக போக்குவரத்து சேவையை வழங்கும் நிறுவனத்துடன் உரிய நிபந்தனைகளை உள்ளடக்கி அமைச்சு முறைப்படியான உடன்படிக்கை செய்து கொண்டிருக்கவில்லை.

(ii) வாடகை வாகனங்களை வழங்கும் இரண்டு நிறுவனங்களுக்கு மத்தியில் ஒரு நிறுவனத்தினால் 2017 மார்ச் மாதத்திலிருந்து யூலை மாதம் வரை போக்குவரத்துச் சேவையை வழங்கியமை தொடர்பாக அந்த நிறுவனத்திற்கு தாமத வட்டியுடன் 2017 ஒக்தோபர் 12 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 12,915,949 மொத்த தொகை அறவிட வேண்டியிருந்தது என அமைச்சு செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீண்டகாலமாக இச் சேவையினை வழங்குவது தொடர்பாக உடன்படிக்கையினை செய்து கொள்வதற்கு உரிய நிறுவனங்களுக்கு முடியாமையின் காரணமாக இவ் வழங்கல் தொடர்பாக குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளுதல் கைவிடப்பட்டுள்ளது என அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

## (எ) 2018 பாதீட்டு உரையை அச்சிடுதல்

-----------------------------------------------------------------

அமைச்சினால் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு உரையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் உள்ளடக்கும் வகையில் 1000 பிரதிகளை அச்சிடுவதற்கு ரூபா 25,319,205 (வரியுடன்) தொகையும் பாதீட்டுப் பொழிப்பு எனும் தலைப்பில் 400 பிரதிகளையும் அச்சிடுவதற்காக ரூபா 900,864 (வரியுடன்) தொகையுமாக ரூபா 26,220,069 கூட்டுமொத்த தொகை (வரியுடன்) செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (அ) மற்றும் 4.3.2 ஆம் வழிகாட்டிகளின் பிரகாரம் அனைத்து தொடர்புபட்ட செலவுகளையும் உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடு மற்றும் பெறுகை நிறுவனத்தினால் தயாரித்த மொத்த கிரய மதிப்பீடு உரிய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் இப்பெறுகை சம்பநதமான கேள்விகளைக் கோருவதற்கு முன்னர் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பாதீட்டு உரையில் அடங்கியுள்ள விடயங்கள் பக்கங்களின் அளவு, பயன்படுத்தப்பட்ட கடதாசி, அச்சிடல் பொருள், பிரதிகளின் எண்ணிக்கை என்பன தொடர்பாக பெரும்பாலும் பாதீட்டு நடைமுறை முடிவுற்ற சந்தர்ப்பத்திலேயே தீர்மானம் எடுக்கப்படுவதன் காரணமாக மதிப்பீட்டினைத் தயாரிப்பது நடைமுறையில் சிக்கலான செயற்பாடு என அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

(ii) நிதிப்பிரமாணம் 632 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு உரையை அரசாங்க அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்வதற்கான வாய்ப்பு தொடர்பாக விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் அச்சிடல் நடவடிக்கை தொடர்பாக பிரதான பொறுப்பு அரசாங்க அச்சகருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் மிகவும் இரகசியமாகவும் மிகவும் குறுகிய காலத்திலும் அச்சிட்டுக்கொள்ளக்கூடிய அரசாங்கத்தின் பாதீட்டு உரையை அரசாங்கத்தின் அச்சகரினூடாக மேற்கொள்வதனானது நடைமுறையில் மிகவும் சிக்கலான விடயம் என அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

(iii) புத்தகங்களை அச்சிடுவதற்குரிய மாதிரிகளைத் தயாரிக்கும் போது புத்தகங்களை அச்சிடுவதற்காக எடுக்கும் காலம் (மணித்தியாலம்) தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் சமர்ப்பித்த காலத்தை அடிப்படையாகக் கொண்ட விலைகள் கொடுப்பனவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(iv) அச்சிடல் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அச்சிடலுக்காக எடுக்கப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு கறுப்பு நிறம் மாத்திரம் அடங்கிய உள்ளக பக்கங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாது உள்ளேயுள்ள அனைத்து பக்கங்களுக்கும் 4 நிறத்தைக் கொண்ட பக்கத்திற்குரிய விலைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க உள்ளக பக்கங்களை அச்சிடுவதற்காக ரூபா 20,880,000 உள்ளடங்கும் வகையில் 1000 புத்தகங்களை அச்சிடுவதற்காக ஏனைய செலவுகள் உள்ளடங்கலாக ரூபா 25,319,205 கூட்டு மொத்த தொகை அமைச்சினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அப்பணம் அச்சிடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது ஒரு பக்கத்திற்கு ரூபா 25,319 ஆகிய மிகவும் அதிக கிரயத்தை மேற்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் ஒரு பக்கத்திற்கான ரூபா 4,691 கிரயத்துடன் ஒப்பிடும் பொழுது 2017 மற்றும் 2018

ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 10,083 மற்றும் ரூபா 20,628 ஆக ஒரு பக்கத்திற்கான கிரயத்தில் அதிகரிப்பு இடம் பெற்றிருந்தது.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) சொத்துக்களின் பௌதீக உள்ளமையை உறுதிப்படுத்துதல்

ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு (i) – நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாகனங்களின் பெறுமதியாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 189,949,957 தொகை தொடர்பாக PED/RED/03/03/60 ஆம் இலக்க 2016 மார்ச் 31 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அவ்வாகனங்கள் பௌதீகரீதியாக உள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்வது தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வாகனப்பயன்பாடு**

(i) பயன்படுத்தப்படாத வாகனங்கள்

ஏனைய அமைச்சினால் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட ஒடும் நிலையில் இல்லாத 05 வாகனங்கள் 2018 யூலை 31 ஆந் திகதியளவில் 07 மதங்களிலிருந்து 12 மாதங்கள் வரையான கால வீச்சில் அமைச்சின் வளவில் திறந்த வெளியில் பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களுக்காக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது. தற்பொழுது இந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் வாகனங்களை மதிப்பீடு செய்யும் குழுவின் மூலம் வாகனங்களை மதிப்பீடு செய்யும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு செயலாளர் கணக்காய்விற்கு தெரிவித்திருந்தார்.

(ii) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சிற்குச் சொந்தமான 13 வாகனங்கள் முறைப்படி ஒப்படைக்கப்படாது அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 08 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இவ் வாகனங்களுக்கு மத்தியில் 02 வாகனங்களுக்குரிய பராமரிப்புச் செலவுகளுக்காக 2017 ஆம் ஆண்டில் அமைச்சினால் ரூபா 155,957 செலவு செய்யப்பட்டிருந்தது.

### 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

**வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நிதி ஏற்பாடுகளின் சேமிப்பை மிகைத்து கடப்பாடுகளை ஏற்படுத்த முடியாது என்ற போதிலும் 12 விடயங்களுக்கான சேமிப்பினை மிகைத்து ரூபா 100.69 மில்லியன் கூட்டு மொத்தமான கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2017 ஆம் ஆண்டின் போது அமைச்சர்கள் / பாராளுமன்ற உறுப்பினர்களால் பல்வேறு உள்நாட்டு விமானச் மற்றும் கூட்டங்களுக்காகப் பங்குபற்றுவதற்கு ஈடுபடுத்தப்பட்ட உள்ளக விமர்சனச் சேவைகளுக்கான கட்டணமாக ரூபா 3,500,130 செலவு செய்யப்பட்டிருந்தது. பொது மக்களின் பிரதிநிதிகளுக்கு உள்நாட்டுப் பயனத்திற்காக விமான சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட சுற்றறிக்கை அல்லது அறிவுறுத்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் கடமைப் பொறுப்புக்களை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் போது தூரப் பயணத்திற்காக நீண்ட நேரம் எடுக்கும் பெருந்தெருக்கள் ஊடாக பயணம் செய்வது நடைமுறையில் சிக்கலான விடயமாகும். இப் பயணம் மிகவும் அவசரமானதாகவும் அவசியமானதாகவும் இருப்பதனால் கௌரவ அமைச்சர் மற்றும் ஏனைய சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் அவசர கடமை ரீதியான நிலைமையைக் கருத்தில் கொண்டு மிக விரைவாக கொழும்புக்கு வருகை தருதல் அத்தியாவசியமானது என்பதனாலும் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான உப கம்பனியாகிய Helitours (Pvt) Ltd இடமிருந்து இப் பயணத்திற்கான போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு செயலாளரால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி எற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 766.28 | 763.42 | 2,83 | 0.37 |
| | மூலதனம் | 1,854.17 | 617.84 | 1,236.33 | 67 |
| | **மொத்தம்** | **2,620.45** | **1,381.26** | **1,239.19** | **47** |
| 2014 | மீண்டுவருபவை | 2,699.93 | 2,699.69 | 0.24 | - |
| | மூலதனம் | 3,004.37 | 1,795.54 | 1,208.83 | 40 |
| | **மொத்தம்** | **5,704.30** | **4,495.23** | **1,209.07** | **21** |
| 2015 | மீண்டுவருபவை | 573.13 | 571.16 | 1,97 | 0.34 |
| | மூலதனம் | 3,056.98 | 701.95 | 2,355.02 | 77 |
| | **மொத்தம்** | **3,630.11** | **1,273.11** | **2,356.99** | **65** |
| 2016 | மீண்டுவருபவை | 1,068.81 | 964.34 | 104.47 | 10 |
| | மூலதனம் | 2,483.89 | 2,209.41 | 274.48 | 11 |
| | **மொத்தம்** | **3,552.70** | **3,173.75** | **378.95** | **11** |
| 2017 | மீண்டுவருபவை | 1,070.63 | 1,017.08 | 53.55 | 05 |
| | மூலதனம் | 4,559.29 | 2,205.81 | 2,353.48 | 52 |
| | **மொத்தம்** | **5,629.92** | **3,222.89** | **2,407.03** | **43** |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல்**

---------------------------------------------

அமைச்சிற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாட்டை வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக பின்வரும் குறைபாடுகள் இடம் பெற்றிருந்தன.

(i) மேலதிக நிதி ஏற்பாட்டை வழங்குதல்

------------------------------------------------------------

செலவுத் தலைப்பின் கீழ் 47 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 310,156,400 தொகையும் 06 மூலதன செலவு விடயங்களுக்காக ரூபா 147,705,500 தொகையும் தொடக்க நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்த 02 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 1,030,970 தொகையும் 02 மூலதன செலவு விடயங்களுக்கு ரூபா 120,607,100 தொகையுமாக ரூபா 579,499,970 கூட்டு மொத்த தொகையான மேலதிக நிதி வழங்கப்பட்டிருந்தது. இது அந்த செலவு விடயங்களுக்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 108 சதவீதமாகும். எதிர்பாராத வகையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக சில செலவு விடயங்களுக்காக மேலதிக நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்வதற்கும் வகை மாற்று நடைமுறையின் கீழ் நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்ளவும் வேண்டி இருந்தது என அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

(ii) பாதீட்டு பிரேரணையை அமுல்படுத்தாமை

-------------------------------------------------------------------

2017 ஆம் ஆண்டிற்கான 276 பாதீட்டு பிரேரணைகளின் கீழ் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள நிதிக் கம்பனிகளை மீளமைப்புச் செய்வதற்காக நிதிச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் ஒரு முகவராண்மையை தோற்றுவிப்பதற்கு ஆரம்ப உரிமை மூலதனமாக ரூபா 10,000,000 இனை ஒதுக்கீடு செய்வதற்கும் 7 ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் ரூபா 10,000,000,000 பெறுமதியான திறைசேரி பிணை முறிகளை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதற்காக தொடக்க மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததனால் செலவு விடய இலக்கம் 102-1-2-15-2509 ஏனைய மூலதன செலவுகளின் கீழ் ரூபா 10,010,000.000 குறைநிரப்பு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அப் பிரேரணை அமுல்ப்படுத்தப்படாது அவ்வாறு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு 2017 செப்தெம்பர் மாதத்தின் போது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பாதிப்புக்கு உள்ளாகிய நிதிக் கம்பனிகளை மீளமைப்புச் செய்வதற்காக நிதிச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் முகவராண்மையைத் தோற்றுவிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தும் இவ்வாறான ஒரு நிறுவனத்தை செயற்படுத்தும் தேவைப்பாடு தொடர்பாக மீண்டும் கவனத்திற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் அந்த நடவடிக்கையை முடிவுறுத்தியதன் காரணமாக நிதி ஏற்பாடு இரத்துச் செய்யப்பட்டதாக அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாமை

--------------------------------------------------------------------------------

11 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 9.55 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் எதுவித பயன்பாடுமின்றி முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) மிகை நிதி ஏற்பாட்டினை வழங்குதல்

09 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,605.22 மில்லியன் கூட்டு மொத்தமான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 921.38 மில்லியன் கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக 28 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது. தேறிய பாதீட்டு திணைக்களத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை தாமதித்தமையும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பெறுகை நடவடிக்கை மீண்டும் மேற்கொள்ள வேண்டியிருந்தமையும் மதகுருமார்களுக்காக வாகனங்களைக் கொள்வனவு செய்தலை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு ஏற்பட்டமையும், SRIS தரவு முறைமையை தயாரிக்கும் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு இயலாமையும், நிதிப்பிரிவை புத்துருவாக்கும் செயற்திட்டத்தின் 2017 ஆம் ஆண்டிற்குள் ஆரம்பிப்பதற்கு முடியாமையும் ஆகிய விடயங்களின் காரணமாக இந்த நிதி ஏற்பாட்டின் சேமிப்பின் அடிப்படையில் இம் மிகை நிதி ஏற்பாட்டு நிலைமை உருவாகியுள்ளது என அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 10201 ஆம் விடய இலக்கததின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 19 | 18.61 | 10 | 12.41 | 70 | 52.86 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டு மொத்தமானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 901,667 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளானவை 03 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகள் வரையான கால வீச்சில் காணப்பட்டு வருவதுடன் அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு அமைச்சு பல்வேறு முயற்சிகள் எடுத்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அக்கடன் மீதிகளை அறவிடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 2.9 கட்டு நிதி கணக்கு

2017 ஆம் ஆண்டிற்கான திறைசேரியின் கட்டு நிதி தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு வேண்டப்பட வேண்டிய கட்டுநிதி | வேண்டப்பட்ட கட்டுநிதி | கிடைத்த கட்டுநிதி | திட்டமிடப்பட்ட மற்றும் வேண்டப்பட்ட கட்டுநிதிகளுக் கிடையேயான வித்தியாசம் | வேண்டப்பட்ட கட்டுநிதிக்கும் கிடைத்த கட்டுநிதிக்கும் இடையிலான வித்தியாசம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| சனவரி | 474.14 | 474.14 | 134.54 | - | (339.59) |
| பெப்ரவரி | 114.17 | 114.17 | 172.10 | - | 57.93 |
| மார்ச் | 286.75 | 286.75 | 113.35 | - | (173.40) |
| ஏப்ரல் | 401.37 | 401.37 | 282.00 | - | (119.37) |
| மே | 593.85 | 593.85 | 72.50 | - | (521.35) |
| யூன் | 394.26 | 394.26 | 193.50 | - | (200.76) |
| யூலை | 346.94 | 346.94 | 128.00 | - | (218.94) |
| ஆகஸ்ட் | 383.54 | 383.54 | 145.52 | - | (238.02) |
| செப்தெம்பர் | 306.04 | 306.04 | 61.00 | - | (245.04) |
| ஒக்தோபர் | 283.97 | 283.97 | 129.07 | - | (154.90) |
| நவம்பர் | 324.37 | 324.37 | 114.00 | - | (210.37) |
| திசெம்பர் | 610.72 | 610.72 | 120.00 | - | (490.72) |
| **மொத்தம்** | **4,520.12** | **4,520.12** | **1,665.58** | **-** | **(2,854.54)** |

மேலுள்ள தகவல்களின் பிரகாரம் திட்டமிடப்பட்டவாறு உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 4,520.12 மில்லியன் மொத்த தொகை கட்டுநிதியாக வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் திறைசேரியால் ரூபா 1,665.58 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 2,854.54 மில்லியன் மொத்த தொகையானது வேண்டிக் கொள்ளப்பட்ட கட்டு நிதியை விடக் குறைவாகக் கிடைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.10 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்பட்டிருக்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுட்டிக்காட்டப்பட்ட மீதிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள பெறுமதிகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. என சான்றுபடுத்தப்பட்ட போதிலும் முறைப்படியாக நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு அமைச்சினால் பேணப்பட்டிருக்காததுடன் நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு தொடர்பான துணைப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான ஒரு நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. இச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் பேணுவது நடைமுறையில் பல்வேறு சிக்கல்களையும் அசௌகரியங்களையும் உருவாக்குவதனால் அது தொடர்பாக

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

**2.11 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்**

2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் மகாநாட்டில் அங்கத்துவ நாடுகள் வெளிப்படுத்திய இணக்கப்பாட்டின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து அங்கத்துவ நாடுகளாலும் அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்களையும் இலக்குகளையும் உள்ளடக்கி நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டிடுள்ளது. இந்த நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக அமைச்சினால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு அமுல்ப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான தெளிவுபடுத்துவதற்கு உரிய முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை. இந்த அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளக சுற்றறிக்கையின் மூலமும், 2018 வருடாந்த பாதீட்டினைத் தயாரிக்கும் வழிகாட்டிகளின் மூலமும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சு செயலாளர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

**2.12 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**2.12.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள்**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ளபடியான, மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 303.46 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க தனிநபருக்கான செலவு ரூபா 847,654 ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 46 | 33 | 13 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 08 | 05 | 03 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 138 | 122 | 16 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 154 | 156 | - | 02 |
| (v) | அமையம் / ஒப்பந்தம் | 52 | 42 | 10 | - |
| | **மொத்தம்** | **398** | **358** | **42** | **02** |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அங்கீகரித்த பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படல்**

------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியளவில் 42 வெற்றிடங்கள் அதாவது அங்கீகரித்த பதவியணியில் 11 சதவீதமான வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ் வெற்றிடங்கள் தற்பொழுது பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சு செயலாளர் கணக்காய்விற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

**(ஆ) பதவியணியினரைப் பயிற்றுவித்தல்**

-------------------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 358 ஆக இருந்ததுடன் அவற்றில் 195 உத்தியோகத்தர்களுக்கு எந்த வகையிலான பயிற்சியும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருக்கவில்லை. அது உள்ளபடியான பதவியணியினரில் 54 சதவீதமாகும்.